நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 58/2023
அரசு தரப்புக்காக அ. சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புவனா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 3 | | | |

1, 4 எதிரிகள் ஆஜரில்இருந்தார்கள். 2, 3 எதிரிகள் ஆஜரில் இல்லை மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

12th day of November 2025.

<u>**முதல் விசாரணை**</u>– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.21 )

நான் தற்போது புவனகிரி தாலுக்கா வத்தவராயன்தெத்து என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டை நிர்வாகம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா. வழக்கில் இறந்துபோன கல்பனா எனது தங்கை. 1–ம் எதிரி எனது தங்கை கல்பனாவின் கணவர். 2, 3, 4 எதிரிகளை எனக்கு தெரியாது. எனது தங்கை கல்பான திருவள்ளூர் கல்லூரியில் படிக்கும்போது 1–ம் எதிரியை எங்களுக்கு தெரியாமல் திருமணம் செய்துகொண்டார். அதன்பிறகு முத்தாண்டிக்குப்பத்தில் 1–ம் எதிரி கலைவாணனுடன் வசித்து வந்தார். ஒரு வருடத்திற்கு பிறகு எனது பாட்டி இறந்ததற்கு இருவரும் வந்தார்கள். அதன்பிறகு என் தங்கை கல்பனா 1–ம் எதிரி கலைவாணன் வீட்டிற்கு சென்றுவிட்டார். 2019–ல்

எனது தங்கை கல்பனாவிற்கு பெண் குழந்தை பிறந்தது. என் தங்கை கல்பனாவிடம் நான் கோபமாக இருந்தேன். அதனால் என்னிடம் பேச மாட்டார். கல்பனா தற்போது இறந்துவிட்டார். நான்கு வருடத்திற்கு முன்பு கல்பனா இறந்துவிட்டதாக எனது அப்பா போன் செய்து சொன்னார். எனது தங்கை தானாக தற்கொலை செய்து கொண்டார் என்று அப்பா சொன்னார். எனது தங்கை தற்கொலைக்கான காரணம் என்ன என்று எனக்கு தெரியவில்லை. எனது தங்கை இறந்தவுடன் விவரம் தெரிந்து நாங்கள் முத்தாண்டிக்குப்பத்தில் தங்கை வீட்டிற்கு போனோம். எனது அப்பாவிடம் என் தங்கை போன் செய்து பேசுவார். எந்த பிரச்சனையும் இல்லை என்று தான் சொன்னார். கலைவாணன் வீட்டிற்கு நாங்கள் சென்று எனது தங்கையை பார்க்கபோனபோது போலிசார் எங்களை தடுத்து நிறுத்தினார்கள். எனது தங்கையின் உடல் அங்கு இல்லை என்றும் அங்கு போக வேண்டாம் என்றும் சொன்னார்கள். போலிசார் குடும்ப பிரச்சனையா என்று கேட்டார்கள். நாங்கள் அப்படி இல்லை என்று சொன்னோம். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. ஆர்டிஓ என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முழுமையாக ஆதரவு அளிக்காத நிலையில் ஏற்கனவே போலீசார் விசாரணையில் விசாரித்த போது கூறியிருப்பதை மறுத்துள்ள நிலையில் இந்த சாட்சியிடம் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய இந்திய சாட்சி சட்டப்பிரிவு 154ன் கீழ் அனுமதி கோரினார். இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை–</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு விசாரித்தபோது நான் புவனகிரி தாலுக்கா வத்தவராயன் தெத்து கிராமத்தில் எனது கணவர் மற்றும் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன் என்றும் என் அப்பா பெயர் முருகன் என்றும் அம்மா பெயர் உமா என்றும் என் அம்மாவும் அப்பாவும் பூதவராயன்பேட்டை கிராமத்தில் எனது தங்கை தம்பியுடன் வசித்து வருகிறார்கள் என்றும் எனது பெரிய தங்கை பெயர் கல்பனா

என்றும் என் இரண்டாவது தங்கை பெயர் பிரியங்கா என்றும் என் தம்பி பெயர் சுரேந்தர் என்றும் நான் குறிஞ்சிபாடியில் திருவள்ளுவர் கலைக்கல்லூரியில் B.Sc மூன்றாம் ஆண்டு படிக்கும்போது என் தங்கை கல்பனா B.A (தமிழ்) இரண்டாம் ஆண்டு படித்து வந்தாள் என்றும் அப்போது கல்பனா முத்தாண்டிருப்பத்தை சேர்ந்த காசிநாதன் மகன் கலைவாணன் என்பவரை காதலித்து வந்தாள் என்றும் அவர் காதலிப்பது எங்களுக்கு தெரியவந்தது என்றும் அப்போது என் அப்பா கல்பனாவிடம் படிப்பு முடியட்டும் என்று கூறினார் என்றும் அதன் பிறகு எனக்கு படிப்பு முடிந்தவுடன் என் அப்பா எனக்கு திருமணம் செய்து வைத்தார் என்றும் பிறகு எனக்கு குழந்தை பிறந்திருந்த போது என் தங்கை கல்பனா 09.06.2017 அன்று எங்க வீட்டை விட்டு வெளியேறி கலைவாணனுடன் சென்று பேர்பெரியாங்குப்பம் அனந்தீஸ்வரர் கோவிலில் திருமணம் செய்து கொண்டார்கள் என்றும் இந்த திருமணம் எங்களுக்கு ஒரு வருடம் கழித்துதான் தெரியவந்தது என்றும் பிறகு என் தங்கையும் கலைவாணனும் எங்க அப்பா அம்மா வீட்டிற்கு வந்தார்கள் என்றும் அப்போது கல்பனாவும் அவரது கணவரும் எங்கள் அப்பா அம்மாவிடம் 5 பவுன் நகையும், 1 லட்சம் பணமும் கேட்டார்கள் என்றும் அதற்கு என் அப்பா எங்களிடம் உள்ள நிலத்தை போக்கியம் வைத்து 80,000 ரூபாய் கொடுத்தார் என்றும் அதன்பிறகு ஒரு வருடம் கழித்து 2019 ஆம் ஆண்டில் கல்பனாவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது அப்போது கல்பனா எங்கள் வீட்டிற்கு மீண்டும் வந்து எங்கள் அப்பா அம்மாவிடம் தன் கணவர் மற்றும் மாமியார் நகையும் பணமும் கேட்டு தன்னை அடிக்கிறார்கள் என்று சொல்லி அழுதுள்ளார் என்றும் அப்போது என் அப்பா பிறகு பணம் தருகிறேன் என்று சொல்லி அனுப்பினார் என்றும் அதன் பிறகு என் தங்கை கல்பனா எனக்கு போன் செய்து தான் முத்தாண்டிக்குப்பத்தில் முந்திரிகொட்டை உடைத்து சம்பாதித்து தன் பிள்ளையை காப்பாற்றி வருவதாகவும் தன் கணவர் தனக்கு ஏதுவும் செய்வதில்லை என்றும் தானும் தன் பிள்ளையும் கூரை வீட்டில் தனியாக உள்ளதாகவும் தன்னுடைய சம்பாதியத்தில் தான் பிழைத்து வருவதாகவும் தன்னை தன் கணவரும், மாமியார் ஜோதிமதியும், தன் பெரிய மாமியார் காந்திமதியும் தன் கணவருக்கு இரண்டாவது திருமணம் செய்ய போவதாகவும், தன்னை மொட்டநாயே ஒன்னும்

இல்லாமல் வந்தவள்தானே நீ, நீ ஏன் இங்கு இருக்கிறாய் எங்கேயாவது போய் தொலை என்று சொல்லி மூவரும் தன்னை அடிக்கிறார்கள் என்றும் அதனால் அப்பா அம்மாவிடம் சொல்லி கொஞ்சம் பணம் கொடுங்கல் என்று என்னிடம் அடிக்கடி சொல்வாள் என்றும் நான் அந்த விவரத்தை என் அப்பா அம்மாவிடமும், என் இரண்டாவது தங்கை பிரியங்காவிடமும் சொல்லுவேன் அப்போது என் தங்கை பிரியங்கா கல்பனாவிற்கு தான் பணம் அனுப்புவதாக சொல்லி அவ்வப்போது கல்பனாவிற்கு போன் மூலம் சென்னையிலிருந்து பணம் அனுப்பினாள் என்றும் அதன்பிறகு 5 மாதத்திற்கு முன்பு என் தங்கை கல்பனா எனக்கு போன் செய்து தன் கணவருக்கு இரண்டாவது திருமணம் நடக்க போவதாக சொன்னாள் என்றும் நான் அவளிடம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னேன் என்றும் ஆனால் என் தங்கை புகார் கொடுத்தாளா என்பது பற்றி எனக்கு தெரியவில்லை என்றும் ஆனால் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் என் தங்கையின் கணவர் கலைவாணன் நர்மதா என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டதாக கேள்விப்பட்டேன் என்றும் ஆனால் என் தங்கை கல்பனா எனக்கு போன் செய்யவில்லை என்றும் பிறகு 05.09.2021 ந் தேதி காலை 09.00 மணிக்கு என் தங்கை பிரியங்கா சென்னையிலிருந்து போன் செய்து முத்தாண்டிக்குப்பம் மேலத்தெருவில் கூரை வீட்டில் கல்பனா தூக்குமாட்டிக்கொண்டதாக முத்தாண்டிகுப்பத்தில் இருந்து போன் வந்தது என்று கூறி உடனே நானும், என் கணவரும், என் பெற்றோர்களும், எங்கள் உறவினர்களும் முத்தாண்டிக்குப்பம் வந்து பார்த்தபோது என் தங்கை கல்பனா பிரேதம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்தது என்றும் மேலும் இன்று 05.09.2021 ந் தேதி காலை 06.45 மணியளவில் என் தங்கை கல்பனாவை அவளது பெரிய மாமியாரும், சின்ன மாமியாரும் சேர்ந்து சண்டை போட்டு அடித்ததாகவும் அதன்பிறகு காலை 07.30 மணியளவில் என் தங்கை கல்பனா அவள் தங்கிருந்த கூரை வீட்டில் தூக்கிட்டு இறந்துபோய் இருந்ததாக அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள் என்றும் என் தங்கை கல்பனாவின் இறப்பில் சந்தேகம் உள்ளது என்றும் எனவே எங்க அப்பா கல்பனா இறப்பிற்கு காரணமான அவரது கணவர் கலைவாணன்

மற்றும் மாமியார் மீது நடவடிக்கை எடுக்கும்படி 05.09.2021 ந் தேதி 12.00 மணிக்கு முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தபோது நானும் உடனிருந்தேன் என்றும் இது சம்மந்தமாக பண்ருட்டி DSP மற்றும் ஆர்டிஓ ஆகியோர் விசாரித்தபோது நடந்த உண்மைகளை சொன்னேன் என்றும் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகி போய் விட்டதால் அவர்களை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக நடந்த விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 03.44 )

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.